## இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் - 2013

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களை (ISSAI 1000–1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 80,150,942 தொகையான பிரசாரச் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,318,681 வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 15,558,831 தொகையான பொருளிருப்பை விலை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தியிருந்த கணக்கீட்டு அடிப்படையும் கணிப்பீடு செய்யப்பட்ட முறையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுக்கும் கீழ்க் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் மீதிகளிற்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான விளக்கமளித்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் படி மீதி | தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் விபரம் | குறித்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் படி மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| இலங்கை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | - | கடன்பட்டோர் | 2,960,342 | 2,960,342 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 26,091,753 | கடன்பட்டோர் | 26,127,775 | 36,022 |

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கு எதிரேயும் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அக் கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மூன்று நாள் பெங்களூர் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் | 11,362,520 | செய்யப்பட்ட வேலைகளின் அறிக்கை |
| (ஆ) செலுத்தவேண்டிய செலவினம் | 155,491,948 | விலைப்பட்டியல்கள் |
| (இ) நிகழ்ச்சி (Event CHOGM) | 359,392,539 | கேள்வி ஆவணங்கள், பொருட்கள் மற்றும் சேவை உடன்படிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | 181,835,691 | விலைப்பட்டியல்கள் |
| | 3,935,028 | பொருள் கையேற்றல் பத்திரம் |
| (ஈ) வியாபார நடவடிக்கை செலவினம் | 53,566,583 | கேள்வி ஆவணங்கள் மற்றும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டிய ரூபா 1,102,961,333 மீதியில் ரூபா 3,404,920 ஆன தொகை 4 ஆண்டுகளிற்கு மேலாகவும், ரூபா 1,831,792 தொகை 2 ஆண்டிற்கு மேல் 3 ஆண்டுகளிற்கு குறைவாகவும் ரூபா 355,000 தொகை 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளிற்கு குறைவாகவும் நிலுவையாகவுள்ள மீதிகளை உள்ளடக்கியதாகும்.

(ஆ) செலுத்தவேண்டிய ரூபா 26,136,236 மீதியிலுள்ள ரூபா 11,575,098 தொகை 6 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 203,890 தொகை 6 ஆண்டுகளிற்கு குறைவான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா48,000 தொகை 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 4 ஆண்டுகளை விட குறைந்த காலமாகவும் ரூபா 1,258,647 தொகை 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 3 ஆண்டுகளிற்கு குறைவான காலமாகவும் ரூபா 6,913,097 தொகை 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளிற்கு குறைவான காலமாகவும் செலுத்த வேண்டியுள்ள மீதிகளை உள்ளடக்கியதாகும்.

### 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் VII ஆம் அத்தியாயம் | |
| (i) 40 ஆம் பிரிவின் 09 ஆவது (அ) ஆம் உப பிரிவு | ஆண்டின் ஏழு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அரையாண்டு கணக்குகள் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 40 ஆம் பிரிவின் 09 ஆவது (உ) ஆம் உப பிரிவு | முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்திற்குரிய அடைவுகள் மற்றும் செயலாற்றல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று ஆண்டின் இறுதியிலிருந்து 3 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 5 ஆம் உப பிரிவு | மீளாய்வாண்டிற்கான தேறிய மிகையான ரூபா 6,238,009 தொகை திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 5 ஆம் அத்தியாயத்தின் 5.1.3 ஆம் பிரிவு | நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், தேவைப்பாட்டுடன் இணங்கி ஒழுகுவதற்கு பணியகம் தவறியிருந்தது. |
| (ii) 9 ஆம் அத்தியாயத்தின் 9.14.1 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவம் சம்பந்தமான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் விதிக்கப்படக்கூடிய விதிகள் மற்றும் பிரமாணங்கள் திறைசேரிச் செயலாளரின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், பணியகம் இத்தேவைப்பாட்டுடன் இணங்கி ஒழுகுவதற்கு தவறியிருந்தது. |
| (ஈ) 2006 இன் அரசாங்க கொள்வனவு சுற்றறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.2.1 (அ) மற்றும் (இ) ஆம் பிரிவு | எதிர்வரும் ஆண்டிற்கான விரிவான திட்டத்துடன் குறைந்தது மூன்று ஆண்டுகளை உள்ளடக்கியதாக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பணியகம் அத் தேவைப்பாட்டிற்கமைய அவ்வாறான திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 6,238,009 மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 828,271,230 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 822,033,221 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான செலவினம் ரூபா 1,390,600,508 ஆல் அதிகரித்திருந்தமை இந்தக் குறைபாட்டிற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் பணியகத்தின் வருமானம் ரூபா 2,021 மில்லியனாக காணப்பட்டதுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,444 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 39.9 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றது. அவ்வாறே முன்னைய ஆண்டின் வர்த்தக நடவடிக்கைகள், சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 549 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 1,940 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய செலவினம் 253.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையைக் காட்டுகின்றது.

**3.3 நிறுவனத்திற்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்**

சர்வதேச இந்திய திரைப்பட விருதுவழங்கும் விழா தொடர்பாக ரூபா 45,915,775 ஆன கொடுப்பனவை வழங்குமாறு பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 07 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்படாதிருந்தன.

**3.4 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்காக கணிக்கப்பட்ட தொழிற்படு மூலதன விகிதத்தின் படி ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மட்டத்தில் தொழிற்படு மூலதனம் பேணப்பட்டிருக்காமையால் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் நலிவான நிலையில் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான செலவினம் ரூபா 1,940 மில்லியனாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான அச் செலவினம் ரூபா 549 மில்லியனாக காணப்பட்டமையால் செலவின அதிகரிப்பு 253.3 சதவீதமாகும். இருப்பினும் வர்த்தக நடவடிக்கைச் செலவினத்திலேற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சுற்றுலா பயணிகளின் வருகையில் ஏற்பட்ட அதிகரிப்பு 26.7 சதவீதம் மாத்திரமேயாகும். அதன்படி, வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த அதிக செலவினம் சுற்றுலா பயணிகளின் வருகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தமையை கணக்காய்வில் அவதானிக்க முடியவில்லை.

(ஆ) சுற்றுலா மேம்பாட்டு பரீட்சார்த்த பிரச்சார நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 68.94 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், உச்ச நலனை நாட்டிற்கு பெற்றுக்கொடுப்பதற்காக பொருத்தமானதும் அனுகூலமானதுமான ஊடகவியலாளர்களை தேர்ந்தெடுப்பதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய நியதிகள் மற்றும் மீளாய்வாண்டினுள் செயற்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை தொடர்பில் முன்னேற்பாடுகளின்றி 29 நாடுகளின் 322 ஊடகவியலாளர்களிற்கு இந் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

(ii) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஊடக பிரச்சாரங்கள் இடம்பெற்றமையினை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் பணியகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகையில் தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி தேவையான செலவினங்களை மேற்கொள்தல் வேண்டுமென்ற 2011

ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தைக் கருத்திற்கொள்ளாது மீளாய்வாண்டில் சீனாவிலும் இந்தியாவிலும் நடாத்தப்பட்ட இரண்டு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 324,998,601 தொகை பணியகத்தினால் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும் இவ்விரு நிகழ்ச்சித்திட்டங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்குபற்றியிருந்த போதிலும், அந்த நிறுவனங்களிடமிருந்து உதவுதொகைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பணியகத்தின் மிகையான ரூபா 1,200 மில்லியன் தொகையினை மீளாய்வாண்டின் திசெம்பர் 27 ஆந் திகதி வரை பொருத்தமான முதலீடொன்றில் ஈடுபடுத்தாமையால் ஏறத்தாழ ரூபா 134 மில்லியன் நிறுவனத்திற்கு இழப்பாகியிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருக்காத ‘‘பட்டதாரி பயிலுனர் செயலமர்வு’’ இன் உபசரிப்புக்காக ரூபா 5,996,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சுக்கு உரித்தான ‘‘திவிநெகும’’ செயற்திட்டத்தின் கீழ் சுற்றுலா வியாபாரச் சமூகத்திற்கு ஆடைகளை வழங்குவதற்காக ரூபா 5,563,488 தொகை தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் தேறிய மிகையில் ரூபா 200,000,000 தொகை நான்கு மாகாண சபைகளிற்கு சுற்றுலா வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், அத் தொகை குறித்த வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் அந்த நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகள் பணியகத்தில் காணப்படவில்லை.

**4.4 தெளிவான மோசடிகள்**

தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாகவும் வெளிப்படையான தன்மையின்றியும் கூறுவிலைகள் கோரப்பட்டு நாட்டிய நிறுவனமொன்றிடமிருந்து நாட்டியக் குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபா 3,015,000 செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 60 சதவீதத்திற்கும் அதிகமான வெற்றிடங்கள் காணப்பட்டன. மீளாய்வாடிலும் முன்னைய ஆண்டிலும் மனித வளத்திற்கான மொத்தக் கிரயம் முறையே ரூபா 31.5 மில்லியன் மற்றும் ரூபா 28.6 மில்லியன் ஆகும். ஆகையால், மீளாய்வாடிலும் முன்னைய ஆண்டிலும் ஊழியரொருவருக்கான கிரயம் முறையே ரூபா 900,654 மற்றும் ரூபா 622,400 ஆகக் காணப்பட்டன.

(ஆ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் VII ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

**4.6 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வாடகைக்குப் பெறப்பட்டிருந்த வாகனங்களிற்காக ரூபா 11,584,750 செலுத்தப்பட்டிருந்ததுடன் வாகனம் ஓடப்பட்ட கிலோமீற்றர் எண்ணிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ஓடிய ஒரு கிலோமீற்றருக்கு ஏற்பட்ட கிரயத்தை கணிப்பிட முடியவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வாடகைக்குப் பெறப்பட்டிருந்த வாகனங்களிற்கான கிரயம் ரூபா 4,992,843 அல்லது 75.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 இன் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களில் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 16 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு முதல் குறைந்தது எதிர்வரும் மூன்று ஆண்டுகளிற்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சந்தைப்படுத்தல் மற்றும் உபாயங்கள் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அச்செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனத்தின் பலம், பலவீனம், அனுகூலமான சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் இனங்காணப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இச்செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயன்முன்னேற்றங்களை நாளதுவரையாக பரீட்சிப்பதற்கான முறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு பணிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரதி மற்றும் உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களின் பிரதிகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 கணக்காய்வுக் குழு**

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தபட்சம் 03 மாதங்களிற்கு ஒரு முறையேனும் கணக்காய்வுக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் மாத்திரம் கூட்டமொன்று நடாத்தப்பட்டிருந்தது.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடு தயாரிப்பட்டிருந்த போதிலும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவாக நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பாதீட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் 35 விடயங்கள் தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளிற்கிடையே 20 சதவீதம் முதல் 132 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு
(இ) வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) கொள்வனவுகள்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு
(எ) நிதி முகாமைத்துவம்